அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் :115/2016

தேதி. 02.07.2016

# மென் பொறியாளர் சுவாதி கொலை வழக்கு ராம்குமார் கைது - காவல் துறைக்கு சமக நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் பாராட்டு

கடந்த 24.06.2016 அன்று சென்னை நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில் நடந்த மென் பொறியாளர் சுவாதி கொலை வழக்கில் கொலையாளி குறித்து எந்த துப்பும் கிடைக்காத நிலையில், நுங்கம்பாக்கம் ரயில் நிலையம் அருகில் உள்ள வீட்டில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமராவில் பதிவாகி இருந்த கொலையாளியின் படம் மட்டுமே உதவியாக இருந்த நேரத்தில், மிக துரிதமாக தொழில்நுட்பத்தின் உதவி கொண்டு ஹைதரபாத்தில் மேம்படுத்தப்பட்ட புகைப்படத்தை காவல் துறை அனைத்து காவல்நிலையம், ஊடகங்கள் மற்றும் பொது மக்கள் பார்வைக்கு வெளியிட்டு கொலையாளி ராம்குமாரை நேற்றிரவு திருநெல்வேலியில் கைது செய்துள்ளது மிகவும் பாராட்டுக்குரிய செயலாகும்.

கொலையாளியை கண்டறிய 8 நாள்கள் 10 தனிப்படைகள் அமைத்து 24 மணிநேரமும் காவல் துறை தீவிர தேடுதல் வேட்டையில் களமிறங்கி உரிய நடவடிக்கை எடுத்து குற்றவாளியை கண்டுபிடித்திருப்பது தமிழக மக்களின் மத்தியில் சட்டம், ஒழுங்கு சீராக உள்ளது என்ற நம்பிக்கையை அதிகரித்துள்ளது. குறுகிய காலத்தில் தனிப்படை அமைத்து கொலையாளியை கைது செய்து சட்டத்துக்கு முன் நிறுத்தியிருக்கும் தமிழக காவல் ஆணையத்துக்கு என் சார்பிலும், சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்



ஆர்.சரத்குமார் B.Sc
தலைவர்